भारत का राजपत्र

# The Gazette of India

इंडिय அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saka

புது தில்லி, திங்கட்கிழமை, 6 மார்ச் 2000/1922 சக

**Ministry of Law, Justice and Company Affairs**
**(Legislative Department)**
**New Delhi**

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்
(சட்டமியற்றுத் துறை),
புது தில்லி

The Translation in Tamil of the Transfer of Property Act, 1882 (4 of 1882). The Dissolution of Muslim Marriage Act, 1939 (8 of 1939) The Foreign Contribution (Regulation) Act, 1976 (49 of 1976), The Companies (Donations to National Funds) Act, 1951 (54 of 1951), The Negotiable Instruments Act, 1881 (26 of 1881), The Company Secretaries Act, 1980 (56 of 1980), are hereby published under the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

சொத்து உரிமை மாற்றச் சட்டம், *1882 (4/1882)*, முஸ்லீம் மண உறவு தீர்த்தல் சட்டம், *1939 (8/1939)*, அயல்நாட்டு நன்கொடை (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டம், *1976 (49/1976)*, நிறுமங்கள் (தேசீய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுத்தல்) சட்டம், *1951 (54/1951)*, மாற்று முறையாவணங்கள் சட்டம், *1881 (26/1881)*, நிறுமச் செயலாளர்கள் சட்டம், *1980 (56/1980)* ஆகியவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், *1973 (50/1973)* இன் பிரிவு *2* இன் கூறு 'அ' வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price: Rs.111.00]

# முஸ்லீம் மணஉறவு தீர்த்தல் சட்டம், 1939

## (சட்ட எண் 8/1939)

[1939 மார்ச்சு 17]

முஸ்லீம் சட்டத்தின்படி மணம் புரிந்த பெண்களால் மண உறவைத் தீர்த்தலுக்கான உரிமை வழக்குகள் தொடர்பான முஸ்லீம் சட்டத்தின் வகையங்களை ஒருங்கிணைப்பதற்கும் தெளிவுபடுத்துவதற்கும் மணமான ஒரு முஸ்லீம் பெண், அவளுடைய மணப்பிணைப்பிலிருந்துகொண்டு இஸ்லாம் சமயத்தைத் துறந்துவிடுவதன் விளைபயன் பற்றிய ஐயங்களை அகற்றுவதற்குமான சட்டம்.

முஸ்லீம் சட்டத்தின்படி மணம்புரிந்த பெண்களால் மணஉறவு தீர்த்தலுக்காகத் தொடரப்பட்ட உரிமை வழக்குகள் தொடர்பான முஸ்லீம் சட்டத்தின் வகையங்களை ஒருங்கிணைப்பதும் தெளிவுபடுத்துவதும் மணமான ஒரு முஸ்லீம் பெண், அவளுடைய மணப்பிணைப்பிலிருந்துகொண்டு இஸ்லாம் சமயத்தைத் துறந்து விடுவதன் விளைபயன் பற்றிய ஐயங்களை அகற்றுவது உகந்ததாய் இருப்பதால்,

ஈங்கிதனால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:—

குறுந்தலைப்பும் அளாவுகையும்.

1. (1) இந்தச் சட்டம், முஸ்லீம் மணஉறவு தீர்த்தல் சட்டம், 1939 என்று வழங்கப்பெறும்.

(2) இது, [1][ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக] இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்[2].

மணஉறவைத் தீர்த்தலுக்கான தீர்ப்பாணைக் குரிய காரணங்கள்.

2. முஸ்லீம் சட்டத்தின்படி மணம்புரிந்த பெண் ஒருவர், பின்வருவனவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணம் அல்லது காரணங்களின் பேரில், தமது மணஉறவைத் தீர்த்தலுக்கான தீர்ப்பாணை ஒன்றைப் பெறுவதற்கு உரிமை கொண்டவராவார், அவையாவன,—

(i) நான்காண்டு கால அளவிற்கு கணவரது இருப்பிடம் பற்றி அறியப் படவில்லை;

(ii) கணவர், இரண்டாண்டு கால அளவிற்கு அவருடைய பேணுகைக்கு வகை செய்யாது புறக்கணித்தார் அல்லது வகை செய்யத் தவறி விட்டார்;

(iii) கணவர் ஏழாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்;

(iv) கணவர், தகுமான காரணம் இன்றி, மூன்றாண்டு கால அளவிற்குத் தம்முடைய மணஉறவு சார்ந்த கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்குத் தவறியிருக்கிறார்;

(v) கணவர் மணமான காலத்தில் ஆண்மையற்றவராக இருந்தார் மற்றும் தொடர்ந்து அவ்வாறே இருந்து வருகிறார்;

(vi) அந்தக் கணவர் இரண்டாண்டுக் கால அளவிற்குப் பித்துப் பிடித்தவராக இருந்திருக்கிறார் அல்லது தொழு நோயினால் அல்லது கடுமையான பால்வினை நோயினால் துன்புற்று வருகிறார்;

---

1. 48/1959 சட்டத்தின் பிரிவு 3 ஆலும் இணைப்புப் பட்டியல் 1 ஆலும் குறித்தசில சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது (1—2—1960 முதல் செல்திறம் பெறுமாறு.)

2. பாண்டிச்சேரி (சட்டங்கள் நீட்டிப்பு)ச் சட்டம், 1968 இன் (சட்ட எண் 28/1968) பிரிவு 3ஆலும் இணைப்புப் பட்டியலாலும் பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சி நிலவரைக்கு நீட்டிக்கப்பட்டது.

(vii) அவள், அவளுடைய தந்தையால் அல்லது பிற காப்பாளரால் அவள் பதினைந்து வயது எய்துவதற்கு முன்பு மணம் செய்து கொடுக்கப்பட்டிருந்து, பதினெட்டு வயது எய்துவதற்கு முன்பு அந்த மணத்தை ஏற்க மறுப்பாளாயின்:

**வரம்புரையாக:** அந்த மணம் உடல் உறவு மூலம் நிறைவு பெறாமலிருத்தல் வேண்டும்;

(viii) கணவர் அவளைக் கொடுமையாக நடத்தினால், அதாவது:—

(அ) வழக்கமாக அவளைத் தாக்குகிறார் அல்லது கொடுமையான நடத்தைமூலம் அத்தகைய நடத்தையானது உடல் அளவில் தீங்கு விளைவிக்கவில்லையாயினும், அவளுடைய வாழ்க்கையை துயர் மிகுந்ததாகச் செய்கிறார், அல்லது

(ஆ) கெட்ட ஒழுக்கமுடைய பெண்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் அல்லது இழிவான வாழ்க்கை நடத்துகிறார், அல்லது

(இ) ஒழுக்கங்கெட்ட வாழ்க்கை நடத்துமாறு அவளை வற்புறுத்துவதற்கு முயல்கிறார், அல்லது

(ஈ) அவளுடைய சொத்தினை அயலடைவு செய்கிறார் அல்லது அதன் மீது அவளுக்குரிய சட்டமுறையான உரிமைகளைப் பயன்படுத்துவதிலிருந்து அவளைத் தடுக்கிறார், அல்லது

(உ) அவளது சமயத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொள்வதை அல்லது பயிலுவதைக் கடைப்பிடிப்பதில் அவளைத் தடங்கல் செய்கிறார், அல்லது

(ஊ) அவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைக் கொண்டிருந்து குரானின் கட்டளைக்கு இணங்க அவளை தகைமைமுறையாக நடத்தவில்லையாயின்,

(ix) முஸ்லீம் சட்டத்தின்படி மணஉறவு தீர்த்தல் செல்லத்தக்கதென ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற காரணம் எதன் பேரிலும்:

**வரம்புரையாக:** (அ) காரணம் (iii) இன் பேரில், தீர்ப்பாணை எதுவும், அந்தத் தீர்ப்புத் தண்டனை முடிவடையும் வரையில், பிறப்பிக்கப்படுதல் ஆகாது;

(ஆ) காரணம் (i) இன் பேரில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை ஒன்று, தீர்ப்பாணைத் தேதியிலிருந்து ஆறு மாத கால அளவுக்குச் செல்திறம் பெறுதல் ஆகாது, மற்றும் அந்த காலஅளவுக்கு கணவர் நேரிலோ அல்லது முகவர் மூலமாகவோ முன்னிலையாகி மற்றும் தமது மணஉறவுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவர் ஆயத்தமாக இருக்கிறார் என்று நீதிமன்றம் தெளிவுறக் காணுமாறு செய்வாராயின், அந்த நீதிமன்றம் கூறப்பட்ட தீர்ப்பாணையை நீக்கிவிடுதல் வேண்டும், மற்றும்

(இ) காரணம் (v) இன் பேரில் தீர்ப்பாணை ஒன்றைப் பிறப்பிப்பதற்கு முன்பு, அந்த நீதிமன்றம், கணவரது விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய ஆணையின் தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள், அவர் ஆண்மையற்ற நிலையிலிருந்து நீங்கியவராயிருக்கிறார் என்று அந்த நீதிமன்றத்தைத் தெளிவுறக் காணச் செய்யுமாறு கணவரை வேண்டுறுத்துகிற ஆணை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும், மற்றும் அத்தகைய கால அளவிற்குள் கணவர் அந்த நீதிமன்றத்தை அவ்வாறு தெளிவுறக் காணும்படி செய்வாராயின், கூறப்பட்ட காரணத்தின் பேரில், தீர்ப்பாணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

3. பிரிவு 2 இன் கூறு (i) எந்த உரிமை வழக்கு ஒன்றிற்குப் பொருந்துகிறதோ அந்த உரிமை வழக்கில்— கணவருடைய இருப்பிடம் தெரியாது இருக்கும் போது அந்தக் கணவரின் வாரிசுகளிடம் அறிவிப்பு சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

(அ) வழக்குரை முன்னிடப்படும் தேதியன்று கணவர் இறந்து விட்டிருப்பாராயின், எந்த நபர் முஸ்லீம் சட்டத்தின்படி அவருடைய வாரிசுகளாக இருந்திருப்பார்களோ அந்த நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அந்த வழக்குரையில் உரைக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய நபர்களிடம் அந்த உரிமை வழக்கின் அறிவிப்பானது சார்வு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும்

(இ) அந்த உரிமை வழக்கில் அத்தகைய நபர்கள் விசாரிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள் ஆவர்:

**வரம்புரையாக:** கணவருடைய தந்தையின் உடன்பிறப்பாளர் மற்றும் கணவருடைய உடன்பிறப்பாளர் எவரேனுமிருப்பின், அவர் அல்லது அவர்கள் வாரிசுகளாக இல்லாதிருப்பினும், தரப்பினராகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4. மணமான முஸ்லீம் பெண் ஒருவர் இஸ்லாம் மதத்தைத் துறத்தல் அல்லது இஸ்லாம் அல்லாத பிற சமயம் ஒன்றிற்கு மாறுதலானது அதுவாகவே அவருடைய மணஉறவு தீர்த்தலாகச் செயற்படுவதாக ஆகாது: மற்றொரு சமயத்திற்கு மாறுவதன் விளைவு.

**வரம்புரையாக:** அத்தகைய துறத்தல் அல்லது மாறுதலுக்குப் பின்பு, பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்ட காரணங்கள் ஏதொன்றின் பேரிலுமான அவருடைய மணஉறவு தீர்த்தலுக்கான தீர்ப்பாணை ஒன்றைப் பெறுவதற்கு அந்தப் பெண் உரிமையுடையவர் ஆவார்:

**மேலும் வரம்புரையாக:** இந்தப் பிரிவின் வகையங்கள் பிற ஏதேனும் சமயத்திலிருந்து இஸ்லாம் சமயத்திற்கு மாறியிருந்து தமது முந்தைய சமயத்தை மீண்டும் தழுவியுள்ள பெண் ஒருவருக்குப் பொருந்துதல் ஆகாது.

5. இந்தச் சட்டத்தில் உள்ள எதுவும், மணமான பெண் ஒருவரின் மணஉறவு தீர்த்தலின் பேரில், முஸ்லீம் சட்டத்தின்படி, அவள் பெற்றிருக்கலாகும் அவருடைய மணக்கொடை அல்லது அதன்பகுதி எதற்குமான உரிமை எதனையும் பாதித்தல் ஆகாது. மணக்கொடைக்கான உரிமைகள் பாதிக்கப்படுதல் ஆகாது.

6. [26/1937 சட்டத்தின் பிரிவு 5 இன் நீக்கறவு] நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1942 (25/1942) இன் பிரிவு 2 ஆலும் இணைப்புப் பட்டியல் I ஆலும் நீக்கறவு செய்யப்பட்டது.